2026  ஜூலை  மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர்  :  131/2025

2026–ஆம் ஆண்டு  ஜூலை  மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW10 (LW19) –  செல்லப்பாண்டி |
| தகப்பனார் பெயர்: | மகாலிங்கம் |
| ஊர்: | கம்பம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், உத்தமபாளையம் காவல்நிலையம் |
| வயது : | 36 |

15.07.2026

(2, 3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.05.2025 ம் தேதி உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண்.150/2025 பிரிவுகள் 296 பி, 118(1), 103(1) BNS மற்றும் 4 of TNPHW Act வழக்கில் கொலையுண்டு இறந்துபோன முத்துமாயன் வயது 75, த/பெ.பெரியகருப்ப தேவர், வார்டு 6, கிழக்குரதவீதி, காமையகவுண்டன்பட்டி

என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல்நிலையத்தில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின்படி தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவர் பேராசிரியரிடம் 02.05.2025ம் தேதி மதியம் 12.50 மணிக்கு கொடுத்தும், 13.10 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யும் அறையில் அங்க மச்ச அடையாளத்தை மருத்துவரிடம் காண்பித்து, பிரேத பரிசோதனை முடிந்த பிறகு, முத்துமாயனின் பிரேதத்தை அவரது மகன் ஈஸ்வரன் என்பவரிடம் அவரது குலவழக்கப்படி அடக்கம் செய்ய ஒப்படைத்தேன்.

2. முத்துமாயன் உடலில் இருந்த இரத்தக்கறை படிந்த கிழித்து எடுக்கப்பட்ட நீல நிறத்தில் கட்டம்போட்ட கைலி ஒன்று, லைட் ஆரஞ்சு நிறத்தில் இரத்தக்கறை படிந்த பட்டாப்பட்டி டவுசர் ஒன்று ஆகியவற்றை எடுத்து தனியறிக்கையுடன் காவல்நிலைய காவல் ஆய்வாளரிடம் ஆஜர் செய்தேன். 05.05.2025ம் தேதி முத்துமாயனின் உடல் உள்ளுறுப்புகளை மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகம், நச்சுவியல் பிரிவில் MDU/TOX.No.1262/2025 கொடுத்து இரசீது பெற்று, காவல்நிலையத்தில் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

3. அதன்பிறகு உத்தமபாளையம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவின்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும், தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த முத்துமாயனின் இரத்த மாதிரியை பெற்று 20.05.2025ம் தேதி மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து, MDU/BIOL.No.232/2025 –ன்படி இரசீதை பெற்று காவல்நிலையத்தில் ஆஜர் செய்தேன். துணை காவல்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

4. எங்கள் காவல்நிலையத்திற்கும், மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 150 கி.மீ. தூரம் இருக்கும். அலுவல் சம்பந்தமாக வேறு மாவட்டத்திற்கு செல்ல வேண்டும்

என்றால் கடவுச்சீட்டு பெற்று செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த கடவுச்சீட்டில் எத்தனை மணிக்கு அலுவலகத்திலிருந்து புறப்பட்டேன், எதற்காக சென்றேன், பணிமுடித்து காவல்நிலையத்திற்கு வந்து தனியறிக்கையுடன் கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பேருந்தில் சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு பேருந்தில் செல்வதற்கு பேருந்து வாரண்ட் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

5. நான் எந்த பேருந்தில் சென்றேன் என்பதை காட்ட, பேருந்து வாரண்ட்டை காவல்நிலையத்தில் ஒப்படைக்கும்போது அதில் பேருந்து நடத்துநரிடம் கையொப்பம் பெற்று ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். கடவுச்சீட்டு மற்றும் பேருந்து வாரண்டை காவல்நிலைய பொதுநாட்குறிப்பேட்டில் பதிவு செய்து ஒப்படைக்க வேண்டும் என்றால் நான் காவல்நிலைய எழுத்தரிடம் கொடுத்தேன். என்னுடைய தனியறிக்கையிலும் கொடுக்கப்பட்ட பணி, எப்போது புறப்பட்டேன், எப்போது காவல்நிலையம் வந்தேன் என்று குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரிதான்.

6. பிரேத பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட அனுமதி கடிதத்தில் யார் மூலமாக கடிதம் அனுப்பப்படுகிறது என்ற விபரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இறந்த நபரை பிரேத பரிசோதனையின்போது எடுத்துக் கொடுக்கப்படும் உடைகளை படிவம் 85 தயாரித்து கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த படிவத்தில் உடையின் விபரம், இருந்த நிலை போன்ற குறிப்புகள் எழுதப்பட வேண்டும் என்றால் சரிதான். அந்த படிவத்தில் தயாரித்த நபர், எடுத்துக்கொடுத்த மருத்துவரின் பெயர், பொருளை பெற்றுக்கொண்ட நபரின் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் படிவம் 85 தயாரிக்கப்படவில்லை என்றால் ஞாபகமில்லை.

7. படிவம் 85–ன் அசல் மற்றும் ஒரு நகலை காவல்நிலையத்திற்கும் மற்றொரு நகலை மருத்துவமனையிலும் சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். மருத்துவமனையிலிருந்து பெற்ற பொருட்களுக்காக என்னிடம்

அத்தாட்சி வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு செல்லும்போது பொருட்களை காவல்நிலையத்திலிருந்து கொண்டு சென்றேன் என்றால் சரிதான், விசிராவை மருத்துவமனையிலிருந்து எடுத்துச் சென்றேன். எல்லா பொருட்கள் மற்றும் விசிரா 20.05.2025ம் தேதி மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் இரத்த மாதிரி மற்றும் சொத்துக்களை 20.05.2025ம் தேதி கொடுத்தேன், விசிராவை 05.05.2025ம் தேதி கொடுத்தேன்.

8. பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, பிரேதத்தின் மீதிருந்த துணிகள் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு செல்லும்வரை யாருடைய பொறுப்பில் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இரத்த மாதிரிகள் பெறப்பட்டு, அவைகள் சான்று பொருட்களில் தடவப்பட்டு, அதன்பின்பு மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு, அனுப்புவதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9. எனது தனியறிக்கை, கடவுச்சீட்டு ஆகியவை வழக்கிற்கு எதிராக இருந்ததால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விசிரா மற்றும் மற்ற தடய பொருட்கள் நீதிமன்ற உத்தரவின்பேரில் கொண்டு செல்லப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் அதற்கான மனுவை காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் மூலம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னவாறு எந்த பணியும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 15.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.15 15:34:11 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
15.07.2026